முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்

அசல் வழக்கு எண். 121/2017

பி.வா.சா. 1 – ராமகிருஷ்ணன்

06–11–2024 சாட்சி மீண்டும் முன்னிலையாகி சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1) தாவாச் சொத்துக்கள் நத்தம் சர்வே பகுதியில் இருப்பதாக நான் குறிப்பிட்டிருக்கிறேன் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.18 ஆக நான் தாக்கல் செய்த ஆவணம் பிழைதிருத்தல் பத்திரம் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.18 ஆவணத்தில் சொத்து விவரத்தில் சொத்துக்களானது நத்தம் ரீ சர்வே எண் 751/12 ல் இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2) பொதுவாக மக்கள் குடியிருக்கும் பகுதி தான் நத்தம் நிலங்களாக வகைப்படுத்தப்படும் என்றால் சரிதான். சர்வே எண் 365 என்பது பட்டா நிலம் என்றால் சரிதான். க.ச.எண்.365 என்பது எப்படி நத்தம் நிலமாக மாறியது என்று எனக்கு தெரியாது. கடந்த 1925 ம் வருடம் சொத்துக்கள் கிரயம் வாங்கப்பட்டதாக வாதிகள் தரப்பில் ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3) மாரப்ப செட்டியார் கிரயம் பெற்ற சொத்துக்கள் எவ்வாறு குமாரசாமி செட்டியாருக்கு சென்றது என்றால் பாகக்கறார் மூலமாக சென்றது. பாகக்கறார் ஆவணத்தில் யாரார் கையெழுத்து இட்டிருக்கிறார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. பாகக்கறார் ஆவணத்தை நான் பார்த்தது இல்லை. பாகக்கறார் மூலமாகத் தான் சொத்துக்கள் குமாரசாமி செட்டியாருக்கு வந்ததாக நான் குறிப்பிடுகிறேன் என்றால் சரிதான்.

4) பாகக்கறார் ஆவணத்திற்கு பிறகு சொத்துக்கள் எவ்வாறு பிரிக்கப்பட்டது என்றால் பிரிக்கப்பட்ட தேதி எனக்கு தெரியாது. 4 நபர்களுக்கும் எவ்வளவு பாகம் ஒதுக்கப்பட்டது என்ற குறிப்பிட்ட விவரம் எனக்கு தெரியாது. தாவாச் சொத்து மனையிடங்களாக பிரிக்கப்பட்ட மனைகளில் ஒரு மனை தொடர்பானது என்றால் சரிதான். லே அவுட் பிளான் எதுவும் நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

5) முத்துச்சாமி சுவாதீனத்தில் தான் இருப்பதாக என்மீது காவல் நிலையத்தில் புகார் அளித்தார் என்றால் சரிதான். ஆனால் அவருக்கும் சொத்துக்கும் சம்பந்தம் இல்லை. நான் முத்துச்சாமிக்கு சொந்தமான இடத்தில் தொந்தரவு செய்ததாக புகார் அளித்தார் என்றால் சரியல்ல. பிழைதிருத்தல் பத்திரமானது 712 என்பது தவறு எனவும், 711 என்பது தான் சரி என பிழைதிருத்தல் பத்திரம் எழுதிக் கொண்டோம்.

6) முத்துச்சாமி புகார் அளித்த பின்பு தான் பிழைதிருத்தல் பத்திரம் எழுதிக் கொண்டோம் என்றால் சரிதான். பட்டா, சிட்டா ஆகியவை பழனிச்சாமி பெயரில் இருந்ததால், அவரிடமிருந்து கிரயம் பெற்றேன். பழனிச்சாமி பெயரில் தனிப்பட்ட ஆவணங்கள் இல்லை என்றால் சரியல்ல. எந்த தேதியிட்ட ஆவணங்கள் என்று எனக்கு சரியாக தெரியவில்லை. அவ்வாறான ஆவணங்கள் எதுவும் நான் தற்போது வரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தவறான ஆவணங்கள் வைத்து நான் உரிமை கொண்டாடுகிறேன் என்றாலும், சொத்துக்கள் அனைத்தும் மாரப்ப செட்டியார் குடும்பத்திற்கு பாத்தியப்பட்டது என்றாலும் சரியல்ல.

7) முத்துச்சாமி பெயரில் கிரய ஒப்பந்தம் ஏற்பட்டு அவர் தான் சொத்துக்களை அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. எனக்கு மனை எண் சரியாக தெரியாது. மனையின் செக்குபந்திகள் தெரியும். நான் தவறான ஆவணங்களின்படி வழக்காடுகிறேன் என்றாலும், எனவே வழக்கு வாதிகளின் செலவு தொகையுடன் அனுமதிக்கப்பட வேண்டும் என்றாலும் சரியல்ல.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

T PRAVEEN KUMAR

Digitally signed by T PRAVEEN KUMAR
Date: 2024.11.06 16:11:53 +1100

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.